# பிளாஸ்டிக் தடைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

மதுரை, டிச. 20–

தமிழகத்தில் பிளாஸ்டிக் தடைக்கு எதிராக தாக்கலான வழக்கை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தள்ளுபடி செய்தது.

மதுரை ரமேஷ் தாக்கல் செய்த மனு: தமிழகத்தில் 2019 ஜன.,1 முதல் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை விதித்து, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளர் 2018 ஜூன் 25 ல் அரசாணை வெளியிட்டார். இதை மத்திய சட்டத்தை பின்பற்றி வெளியிடவில்லை.

எந்தெந்த வகையான பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தலாம், பயன்படுத்தக்கூடாது மற்றும் குறிப்பிட்ட அளவு அனுமதிக்கப்பட்ட மைக்ரான் அளவு பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தலாமா என தெளிவுபடுத்தவில்லை.

வனத்துறையினர் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதே பிளாஸ்டிக் பைகளை விவசாயிகள் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. பால் பாக்கெட்டுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் தண்ணீர் விற்பனைக்கு பிளாஸ்டிக் பைகள் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசாணையில் குளறுபடிகள் உள்ளன.

தமிழக அரசின் அரசாணைக்கு தடை விதித்து, ரத்து செய்ய வேண்டும். மத்திய சட்டத்தை பின்பற்றி ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதிக்க சிறப்புச் சட்டம் கொண்டு வர அல்லது புதிய அரசாணை வெளியிட தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு ரமேஷ் மனு செய்தார்.

நீதிபதிகள் கே.கே.சசிதரன், பி.டி.ஆதிகேசவலு அமர்வு விசாரித்தது. தமிழக அரசின் கூடுதல்

**தலைமை வழக்கறிஞர்:** 16 மாநிலங்கள் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்துள்ளன. ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் கேரி பேக், பிளாஸ்டிக் டம்ளர், உ கப், பிளாஸ்டிக் கொடிகள் உட்பட 14 வகை பிளாஸ்டிக் பொருட்களுக்கு தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டப்படியே அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

**நீதிபதிகள்:** மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் தவறு காண முடியாது. சிறப்புச் சட்டம் கொண்டுவர உத்தரவிட முடியாது. மனுவை தள்ளுபடி செய்கிறோம் என்றனர்.

# வி.ஏ.ஓ.,க்கள் எதிர்ப்பால் செயலுக்கு வராத 'இ–அடங்கல்'

சிவகங்கை, டிச. 20–

முதல்வர் துவங்கி 3 மாதங்களாகியும் வி.ஏ.ஓ.,க்கள் எதிர்ப்பால் 'இ–அடங்கல்' திட்டம் செயலுக்கு வராதநிலை உள்ளது.

...களுக்கு கொடுக்கின்றனர். அதனை 'ஆன்லைனில்' விவசாயிகளே பதிவிறக்கம் செய்யும் வகையில், 'இ–அடங்கல்' திட்டம் அறிவிக்கப்பட்டது. அக்...

இதற்கு வி.ஏ.ஓ.,க்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதால், முதல்வர் துவக்கி வைத்து 3 மாதங்களாகியும் செயலுக்கு வரவில்லை.

வி.ஏ.ஓ.,க்கள் கூறியதா...

## குடும்பத்தின

எந்த
ராசிக்
எத்தன